CC.No.390 /2022 (JM.No.II, DHARMAPURI.)

09.05.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW7 :திரு. பார்த்தீபன் (காவல் உதிவி ஆய்வாளர்–ஓய்வு)**

**முதல் விசாரணை**

1. நான் தருமபுரி நகர காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 28.10.2020 ம் வருடம் இரவு 08.00 மணிக்கு நிலைய ஆஜரில் இருந்தபோது அதியமான்கோட்டை கிராமத்தை சேர்ந்த காளியப்பன் மகன் சக்திவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகாா மனுவின் பேரில் அதியமான்கோட்டை காவல் நிலைய குற்ற எண்.1375/2020 U/s.279, 337,304 ஏ இ.த.ச வாக வழக்கு பதிவு செய்து, வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 29.10.2020 காலை 06.30 மணிக்கு வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் திருநாவுகரசு த/பெ மாணிக்கம், ஏ.ஜெட்டிஅள்ளி, பச்சியப்பன் இவர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம், பார்வைமகஜர் தயார் செய்தேன். பின்பு தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்து போன குமார் என்பவரின் பிரேதத்தை பார்வையிட்டு 08.30 –10.30 மணி வரை சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். பிரேத விசாரணை முடித்து 10.40 மணிக்கு முதல் நிலை காவலர் 128,கோவிந்தன் என்பவரிடம் பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதத்துடன் பிரேதத்தை ஒப்புவித்தேன். சாட்சிகள் 1 முதல் 12 வரையுள்ளவர்களை தனித்தனியாக விசாரித்து தனித்தனியாக வாக்குமூலும் பதிவு செய்தேன். 03.11.2020 அன்று சாட்சி சதிஷ்குமார் ஓட்டி வந்த விபத்து வாகனம் TN 29 AF 0274 வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.மணிமாறன் அவர்களிடம் வாகனத்தை ஆய்வு செய்வதற்காக உட்படுத்தினேன். வழக்கின் எதிரி சூர்யா த/பெ பழனி என்பவரை 18.11.2020 காலை 10.30 மணிக்கு நல்லம்பள்ளி பேருந்து நிறுத்ததில் கைது செய்து நிலையம் வந்து முறைப்படி காவல்படுத்தி நிலைய பிணையில் விடுவித்தேன்.

2. பின்பு அன்றைய தினமே வழக்கின் விபத்து வாகனம் TN 29 AM 8323 என்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.மணிமாறன் அவர்களிடம் வாகனத்தை ஆய்வு செய்வதற்காக உட்படுத்தினேன். TN 38 T 7081 எதிரி ஓட்டி வந்த விபத்து வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.மணிமாறன் அவர்களிடம் வாகனத்தை ஆய்வு செய்வதற்காக உட்படுத்தினேன். மருத்துவர் கிருஷ்ணகுமார் என்பவரை

விசாரித்து 03.05.2021 அன்று முனிஸ் மற்றும் சதீஷ்குமாரின் காயச்சான்றிதழ்களை பெற்றேன். இத்துடன் என்னுடைய வழக்கு விசாரணையை முடித்து கொண்டு 18.11.2021 அன்று மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு.ரங்கசாமி மேற்பார்வையில் வழக்கு கோப்புகளை ஒப்புவித்தேன். இவ்வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.3, மோட்டார் வாகன ஆய்வறிக்கை TN 38 T 7081 அ.சா.ஆ.4, TN 29 AF 0274 வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5, TN 29 AM 8323 என்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1.அதியமான்கோட்டை காவல்நிலையத்திற்கும், குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கும் 3 கி.மீ தூரம் இருக்கும். 28.10.2020 ம் தேதி புகார் பெற்ற அன்றே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கை நீதிமன்ற காவலரிடம் கொடுத்து அனுப்பிவைக்கப்பட்டது. அவருடைய பெயர் ஆவணங்களை பார்த்தால் கூறுவேன். இந்த புகார் சம்பந்தப்பட்ட முதல் தகவல்அறிக்கை நீதிமன்றத்திற்கு சென்று சேர்ந்ததா என்று விசாரிக்கவில்லை. முதல் தகவல் அறிக்கை 02.11.2020 அன்று தான் நீதிமன்றத்திற்கு நான்கு நாட்கள் கழித்து வந்தற்கான காலத்தாமதத்திற்கான காரணம் அலுவலக பணிசுமை ஆகும். காலதாமதத்திற்கான காரணம் நான் கூற இயலாது என்றாலும் நீதிமன்ற காவலர் தான கூற இயலும் என்றாலும் சரியல்ல. 28.10.2020 அன்று நான் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் 02.11.2020 அன்று பின்னிட்டு எதிரி குற்றவாளியாக சேர்க்கப்பட வேண்டும் என்று காலத்தாமதமாக பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

2. புகார் எடுத்த சக்கரவேல் என்பவர் குமார் எனபவர் இறந்து மருத்துவமனையில் இருப்பதாகவும், அதை பார்த்துவிட்டு பின்னர் வந்து புகார் அளித்தார் என்றாலும் சரிதான். விபத்து ஏற்பட்ட இடத்திற்கும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கும் உள்ள தொலைவு சுமார் 3 கி.மீ தூரம் இருக்கும். சம்பவயிடத்திற்கும் அதியமான்கோட்டை காவல் நிலையத்திற்கும் சுமார் 6 கி.மீ இருக்கும். புகார் அளித்தவர் எந்த வாகனத்தில் மருத்துவமனைக்கு சென்று பின்பு மீண்டும் காவல் நிலையம் வந்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. புகார் அளித்தவர் சம்பவயிடத்தை நேரில் பார்த்தார். புகாரை சம்பவயிடத்தை நேரில்

பார்த்ததாக குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து தருமபுரி அரசு மருத்துவமனைக்கு செல்ல சுமார் 20 நிமிடங்கள் ஆகும் என்றால் சரிதான். புகார்தாருக்கு இறந்தவரின் இறப்பு குறித்து மருத்துவமனையில் யார் தகவல் அளித்தார்கள் என்றால் மருத்துவர் இறந்துவிட்டதாக கூறினர் என்று புகார்தாரர் கூறினார். மருத்துவரின் பெயர் குறிப்படவில்லை. இறப்பு குறித்து மருத்துவர் தகவல் அளித்த பின்னர் தான் பிரிவு 304 ஏ கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

3. மறுநாள் 29.10.2020 அன்று பிரேதத்தை சென்று பார்த்த போது இறப்பின் தகவலை கூறிய மருத்துவர் யார் என்று விசாரித்தேனா என்றால் அப்போது இருந்த அலுவல் மருத்தவர் சான்று அளித்திருப்பார் பெயர் குறிப்பிடப்படவில்லை. இறந்த போன குமார் சம்பவயிடத்திலிருந்து மருத்துவமனைக்கு செல்லும் வழியில் இறந்திருந்தால் முதலில் மருத்துவரிடம் பிரேதத்தை காண்பிக்கப்பட்டு அவர் இறப்பிற்கான சான்றிதழ் உடன் பிணவறைக்கு பிரேதத்தை எடுத்து சென்றிருப்பர் என்றால் சரிதான். மேற்கண்டவாறு பிணவறைக்கு பிரேதத்தை எடுத்துச் செல்ல சுமார் ஒரு மணிநேரமாகியிருக்கும் என்றால் சரிதான். மேற்கண்டவாறு இறந்து போன நபரை பார்த்துவிட்டு புகார்தாரர் காவல் நிலையத்திற்கு சுமார் இரவு 08.00 மணிக்கு வந்து புகார் அளித்திருக்க சாத்தியகூறு இல்லை என்றால் சரியல்ல. எதிரி வந்த இருசக்கர வாகனம் மட்டும் இல்லாமல் பின்னால்வந்த வாகனமும் TN 29 AF 0274 இடித்து தான் குமார் என்பவர் இறந்தார் எனறால் சரியல்ல. மூன்றாவதாக பின்னால் வந்த வாகனத்தை TN 29 AF 0274 ஓட்டி வந்த சதீஷ்குமார் என்பவரை விசாரித்ததில் அவர் குரூப் எக்ஸாம் படித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்கண்ட வாகனம் சந்தோஷ் என்பவர் பெயரில் உள்ளது என்றாலும் வாகனத்தின் பதிவு சான்று சதீஷ்குமார் பெயருக்கு மாற்றப்படவில்லை என்றாலும் சரிதான். மேற்கண்ட சதீஷ்குமாரின் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் அவரை வழக்கிலிருந்து தப்பிக்க வைக்க எதிரியின் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. விபத்து நடந்த பிறகு பின்னால் மூன்றாவதாக வந்த வாகனம் TN 29 AF 0274 Yamaha நிலைத்தடுமாறி விழுந்து இந்த வாகனத்தின் ஓட்டுனருக்கு அடிப்பட்டது என்று புகாரில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்னால் வந்த மூன்றாவது வாகனத்தின் ஓட்டுநருக்கும் விபத்தில் காயம் ஏற்பட்டும் அவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் புகாரில் காயம் ஏற்பட்டுள்ளது என்று மட்டும் தான் குறிப்பிட்டுள்ளார். அதனால் முதல் தகவல் அறிக்கை அவர் மீது பதிவு செய்யவில்லை.

4. இறந்த குமார் என்பவர் ரோட்டின் குறுக்கே அஜாக்கிரதையாக வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் எதிரியின் கவனக்குறைவு என்றாலும் சரியல்ல. விபத்தில் இறந்த குமார் என்பவர் (தருமபுரி–நல்லம்பள்ளி) வடக்கு திசையிலிருந்து தெற்கு திசையை நோக்கி சென்ற போது விபத்து ஏற்பட்டது. எந்த குறிப்பிட்ட கடையிலிருந்து இறந்தவர் திண்பண்டம் வாங்கி கொண்டு சென்றார் என்று கடையின் பெயர் குறிப்பிடப்படவில்லை. சாட்சிகள் யாரும் எந்த திசையிலிருந்து திண்பண்டம் வாங்கி எந்த திசையை நோக்கி சென்றார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜரில் சாலையை கடப்பதற்காக வழி(Crossing lines) இல்லை என்றால் சாலையை கடப்பதற்கான இடைவேளை குறிப்பிடப்பட்டுள்ளது. இறந்த குமார் என்பவர் மேற்கு பக்கமிருந்து கிழக்கு நோக்கி சாலையை கடந்து சென்ற போது தனது இடதுபுறம் வந்த எதிரியின் வாகனத்தை கண்டுக்கொள்ளாமல் திடீரென சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சென்டர் மீடியம் அருகே தான் நடந்தது என்றால் சரிதான். எதிரிக்கு இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தம் இல்லை என்றாலும், நான்சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியை தவறாக இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.